### நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் தீக்குளித்து 4 பேர் பலி:

# தமிழகத்தையே உலுக்கிய சம்பவத்தை விரைவாக விசாரிக்க செசன்சு கோர்ட்டுக்கு உத்தரவு

## "ஆஜராகாவிட்டால் பிடிவாரண்டு"-நீதிபதி அதிரடி

மதுரை, ஆக.5-

நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் 2 குழந்தைகளுடன் தம்பதியினர் தீக்குளித்து இறந்த சம்பவத்தை விரைவாக விசாரிக்க செசன்சு கோர்ட்டுக்கு மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. ஆஜராகாதவர்களுக்கு பிடிவாரண்டு பிறப்பிக்க வேண்டும் எனவும் நீதிபதி அதிரடியாக உத்தரவிட்டார்.



### குழந்தைகளுடன் தீக்குளித்த தம்பதி

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் காசிதர்மம் பகுதியைச் சேர்ந்த கோபி, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்த தாவது:-

கடந்த 2017-ம் ஆண்டு கந்துவட்டி கொடுமை காரணமாக இசக்கிமுத்து, அவருடைய மனைவி சுப்புலட்சுமி, இவர்களுடைய 2 குழந்தைகள் என 4 பேரும் நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தீக்குளித்து இறந்தனர். இவர்கள் எனது நெருங்கிய உறவினர்கள்.

இந்த சம்பவம் குறித்து முத்துலட்சுமி, தளவாய்ராஜ், காளி, கார்த்திக் ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு நெல்லை மாவட்ட ஜுடிசியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. ஆனால் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### கிடப்பில் போட்டனர்

இதையடுத்து இந்த வழக்கை முறையாக விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கீழ்கோர்ட்டில் மனு தாக்கல் செய்தேன். அதன்படி வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலித்து உரிய விசாரணை நடத்த கடந்த 2020-ம் ஆண்டில் முடிவானது. ஆனால் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியாக நோட்டீஸ் அனுப்பப்பட்டும், இதுவரை அவர்கள் ஆஜராகவில்லை.

இதற்கிடையே இந்த வழக்கில் உரிய விசாரணையை போலீசார் கிடப்பில் போட்டுவிட்டனர். சம்பவம் நடந்து 5 ஆண்டுகள் ஆகியும் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. எனவே இந்த வழக்கு விசாரணையை துரிதப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

### தமிழகத்தையே உலுக்கிய சம்பவம்

இந்த வழக்கு நீதிபதி சிவஞானம் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் சார்பில் வக்கீல்கள் ஹென்றி டிபென், கருணாநிதி ஆகியோர் ஆஜராகி, இசக்கி முத்து, அவரது மனைவி, குழந்தைகள் தீக்குளித்த சம்பவம் தமிழகத்தையே உலுக்கியது. ஆனால் அவர்களின் சாவுக்கு காரணமானவர்கள் மீது பெயரளவுக்கு வழக்குபதிவு செய்யப்பட்டது.

3 ஆண்டுகள் கழித்து 2020-ம் ஆண்டில் இந்த வழக்கில் உரிய முகாந்திரம் உள்ளது என பதிவு செய்து, விசாரிக்க கீழ்கோர்ட்டு முடிவு செய்தது. அதன்பின் 2 ஆண்டுகள் ஆகியும், உரிய விசாரணைக்காக இந்த வழக்கு செசன்சு கோர்ட்டுக்கு மாற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதற்கு எதிர்தரப்பினர்தான் காரணம். இந்த விசாரணையை துரிதப்படுத்த வேண்டும் என்று வாதாடினர்.

### கீழ்கோர்ட்டு நடவடிக்கைக்கு உத்தரவு

அப்போது, 4 பேர் தீக்குளித்து இறந்த வழக்கை நெல்லை மாவட்ட செசன்சு கோர்ட்டு விசாரணையை தொடங்கும் வகையில் வழக்கு ஆவணங்களை மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு ஒப்படைக்க வேண்டும். வழக்கு விசாரணைக்கு, குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஆஜராக தாமதித்தால், பிடிவாரண்டு அனுப்பி ஆஜராகுமாறு உத்தரவிட்டு விசாரணையை விரைந்து நடத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் என அதிரடியாக உத்தரவிட்டு, வழக்கை ஒத்திவைத்தார்.

DAILY THANTHI தினத்தந்தி NO.1 TAMIL DAILY